**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 123/2020

Prosecution witness for P.W.5

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு.சந்தான குமார்** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.10.2025.

Accused are present.

**முதல் விசாரணை**

நான் தற்போது குருவிக்குளத்தில் குடியிருந்து நிதிநிறுவனம் நடத்தி வருகிறேன். இறந்து போன ராமநாதன் என் மாமா. ஆஜர் எதிரிகளை தெரியும். 2019 ம் ஆண்டு ஒரு நாள் பகல் சுமார் 2 மணி அளவில் அ.சா.1,2 ஆகியோருடன் கல்லூரணி அருகில் ஒரு காட்டுக்குள் சென்று பார்த்தபோது ஒரு பிரேதம் இருந்தது. பிரேதம் அழுகிய நிலையில் இருந்தது. பிரேதத்தில் ஜீன்ஸ் பேண்ட் மற்றும் சட்டை இருந்தது. சட்டை நிறம் தெரியவில்லை. நீல நிற ஜீன்ஸ் பேண்ட் இருந்தது. பிரேதத்தின் அருகில் மதுபாட்டில் இருந்தது. பிரேதத்தில் நெஞ்சில் டேட்டு குத்தப்பட்டிருந்தது. பிரேதத்தின் அருகில் ஒரு நிறுவனத்தில் வழங்கப்பட்ட அடையாள அட்டை இருந்தது. அடையாள அட்டையில் ராமநாதன் என்ற பெயர் இருந்தது. நான் மேற்படி இடத்திற்கு போகும்போது அ.சா.1,2 மற்றும் அந்த பகுதியை சேர்ந்த பையன்கள் இருந்தார்கள். அது சம்மந்தமாக அ.சா.1 புகார் கொடுத்தார். நான் அறிவேன் சாட்சியாக கையொப்பம் இட்டுள்ளேன். அந்த கையொப்பத்தை நான் திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் நான்

போட்டேன். போலிசார் அரசு மருத்துவமனையில் பிரேத விசாரணை செய்தார்கள். நானும் உடன் இருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் மேற்படி பிரேதம் இருந்த இடத்திற்கு இறந்து போன நபரின் உறவினர்களுடன் போகவில்லை. நான் வேலை செய்யும் இடம் கழுகுமலை. கழுகுமலையில் இருந்து சுமார் 15 கி.மீ தள்ளி மேற்படி பிரேதம் கிடந்தது. நான் இதே வழக்கு சம்மந்தமாக இளம் சிறார் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன். அந்த வழக்கில் நான் பிறழ் சாட்சியாக மாறினேன் என்றால் சரிதான். நான் ஒரு நபர் இறந்து கிடக்கிறார் என்ற தகவல் கிடைத்தவுடன் பிரேதம் கிடந்த இடத்திற்கு சென்றுவிட்டு பிறகு திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். இறந்து போன நபர் என் உறவினர். அதனால் முதல்விசாரணையில் பொய்யான சங்கதிகளை சாட்சியமாக அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

என் மாமா அமல்ராஜ் என்பவர் எனக்கு தகவல் சொன்னார். நான் மேற்படி இடத்திற்கு நான் இருசக்கர வாகனத்தில் தனியாக சென்றேன். அங்கு போலிசார் இருந்தார்கள். அ.சா.1,2 காரில் வந்தார்கள். அவர்களை போலிசார் அழைத்து வந்தார்களா என்றால் எனக்கு தெரியாது. அங்கு எங்கள் ஊர் காரர்கள் சுமார் 10,15 பேர் இருந்தார்கள். நான் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு இரவு 7 மணியளவில் சென்றேன். பிரேதம் இருந்த இடத்தில் 2 1/2 அல்லது 3 மணி நேரம் இருந்தேன். பிறகு என் வீட்டிற்கு சென்று விட்டு மீண்டும் அரசு மருத்துவமனை சென்றேன். பிரேதம் மிகவும் அழுகிய நிலையில் இருந்தது. நான் சொன்ன நேரத்திலும் சொன்ன விதத்திலும் மேற்படி இடத்திற்கு போகவில்லை என்றும் இறந்து

போன நபர் என் உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

I Additional District & Sessions Judge,
Thoothukudi.